செ.வெ.எண்: 596 நாள்: 12.09.2019

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலன் சார்ந்த திட்டங்கள் தொடர்புடையவர்களுக்கு சென்று சேர்வதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

## இந்திய தேசிய ஆதிதிராவிடர் ஆணையத்தின் துணைத்தலைவர் திரு.எல்.முருகன் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலன் சார்ந்த திட்டங்கள் மற்றும் பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் இந்திய தேசிய ஆதிதிராவிடர் ஆணையத்தின் துணைத்தலைவர் திரு.எல்.முருகன் அவர்கள் தலைமையில், ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (12.09.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்திய தேசிய ஆதிதிராவிடர் ஆணையத்தின் துணைத்தலைவர் அவர்கள் பேசியதாவது.

இந்திய தேசிய ஆதிதிராவிடர் ஆணையத்தின் சார்பில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஆதிதிராவிடர் முன்னேற்றதிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்த வரை அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவ, மாணவிகளின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், விடுதிகளின் தரம் வீட்டுமனைப் பட்டா வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் இப்பொது மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், நிதி ஒதுக்கீடு மற்றும் செலவிடப்பட்ட விபரம், கல்வி உதவித் தொகை மற்றம் மானிய விலையில் சுயதொழில் கடன் வழங்கிய விபரம், தமிழக அரசின் சார்பில் தாட்கோ திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், பசுமை வீடு ஒதுக்கீடு விபரம், வன்கொடுமை தடுப்புச் சட்ட நடவடிக்கை,

கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்ட பணிகள் போன்ற அனைத்து திட்டப் பணிகளும் ஆய்வு செய்யப்பட்டது.

சமூக நல்லிணக்க விருதுபெறும் கிராமங்களுக்கு வழங்கப்படும் நிதியின் மூலம் தேவையான பணிகள் மேற்கொள்வதை அலுவலர்கள் உறுதி செய்வதுடன் அனைத்து தரப்பு மக்களும் ஒற்றுமையுடன் வாழும் வகையில் அரசின் திட்டங்களை அனைத்து பகுதிகளிலும் சமமாக மேற்கொள்ள வேண்டும். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை தொடர்ந்த சிறந்த முறையில் செயல்படுத்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இந்திய தேசிய ஆதிதிராவிடர் ஆணையத்தின் துணைத்தலைவர் திரு.எல்.முருகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் டி.சாந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாலதி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சசிகலா உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**